செய்தி வெளியீடு எண்: 451 நாள்: 6.8.2009

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

**பத்திரிக்கைச் செய்தி**

A (H1N1) வைரஸ் நோய் தற்பொழுது உலகளவில் 168 நாடுகளில் சுமார் 1,62,000 நபர்களுக்கு காணப்பட்டுள்ளது. இவர்களில் 1154 நபர்கள் இறந்துள்ளனர் என்று உலக சுகாதார நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் இதுநாள்வரை A (H1N1) என்னும் வைரஸ் நோய் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வந்தவர்களிடம் தான் காணப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து வந்த பயணிகளை விமான நிலையங்களிலும் துறைமுகங்களிலும் பரிசோதனை செய்யப்பட்டனர். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் நிமான நிலையங்களில், வெளிநாடுகளிலிருந்து வந்த 7,51,932 பயணிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு வரும் சரக்கு கப்பல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சுமார் 6,740 நபர்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். தற்போது நம் நாட்டில் உள்ளூர் தொற்றின் காரணமாக A (H1N1) நோய் பரவிக் கொண்டு வருகிறது. சில நாட்களுக்கு முன்னர் மஹாராஷ்டிரா மாநிலம் பூனாவில் 14 வயது பள்ளிச் சிறுமி இந்நோயின் பாதிப்பால் இறப்புக்குள்ளானார். அந்த மாநிலத்தில் பூனா மற்றும் சித்தாரா மாவட்டங்களில் A (H1N1) நோய் பரவி வருகிறது.

இந்தியாவில் 2,479 நபர்களுக்கு இந்நோய் குறித்து பரிசோதனை செய்ததில் 558 நபர்களுக்கு இந்நோய் உள்ளதாக பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 14 வயதுள்ள பூனாவைச் சேர்ந்த சிறுமி ஒருவர் இறந்துள்ளார்.

தமிழகத்தில் சந்தேகத்திற்குரிய 238 பேருக்கு தொண்டை சளி மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்ததில், 36 நபர்களுக்கு இந்நோயின் தாக்கம் உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்கள் நலமாக உள்ளனர்.

இந்நோய் இருந்தால் காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி, வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற அறிகுறிகள் தென்படும். மேற்கூறிய அறிகுறிகள் வெளி நாடு சென்று திரும்பிய நபர்களிடமோ அல்லது வெளி நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்த பயணிகளின் குடும்ப உறுப்பினரிடமோ காணப்பட்டால் உடனடியாக கிண்டியிலுள்ள கிங் ஆய்வு நிலையம் அல்லது வேலூரிலுள்ள கிறிஸ்டியன் மருத்துவக் கல்லூரியிலோ அணுகி A (H1N1) நோய் தாக்கம் உள்ளதா என்பதை பரிசோதித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. இந்த பரிசோதனைகள் தனியார் மருத்துவமனைகளிலும் தனியார் ஆய்வகங்களிலும் செய்யப்படுவது கிடையாது.

A (H1N1) நோயின் தாக்கம் கண்டவர்கள் மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனை, தண்டையார்பேட்டை, சென்னை, அரசு ஸ்டேன்லி புறநகர் மருத்துவமனை, தண்டையார்பேட்டை, சென்னை, ஆஸ்டின்பட்டி தொற்று நோய் மருத்துவமனை, மதுரை மற்றும் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகிய அரசு மருத்துவமனைகளை மட்டுமே அணுகி உள் நோயாளியாக சேர்ந்து உரிய முழு சிகிச்சையினை பெற அறிவுறுத்தப்படுகிறது.

தனியார் மருத்துவமனைகள், நோயளிகளை தனிமைப்படுத்தும் வசதி இருந்தால் மட்டுமே சிகிச்சைக்காக அனுமதிக்க வேண்டும்; அவ்வாறு அனுமதிக்கப்படுபர்களின் முழு விவரத்தையும் உடனடியாக பொது சுகாதாரத் துறை இயக்குநருக்கோ அல்லது அருகில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி முதல்வருக்கோ உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

இந்நோய்க்கு உரிய மருந்துகள் மேற்கண்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் பொது சுகாதாரத் துறையில் மட்டுமே உள்ளது. தனியார் மருத்துவமனைகளில் இந்நோய்க்கான உரிய மருந்துகள் இல்லை. மருந்துக் கடைகளில் இந்த மருந்துகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் மஹாராஷ்ரா மாநிலத்திற்கு அத்தியாவசிய காரணங்கள் இருந்தால் மட்டுமே பயணம் செய்யுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சுற்றுலா செல்வதையும் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

A (H1N1) நோய் **வராமல் இருக்க தடுப்பு முறைகள்**

1. தும்மல் மற்றும் இரும்மலின்போது கைக்குட்டையால் வாய் மற்றும் மூக்குப் பகுதியை மூடிக்கொள்ள வேண்டும்.
2. அடிக்கடி கைகளை சோப்பு போட்டு கழுவிக் கொள்ள வேண்டும்.
3. நோயின் அறிகுறி தென்பட்டால் –
    - கூட்ட நெரிசலில் செல்லுவதை தவிர்க்கவும்
    - பாதிக்கப்பட்ட நபர், தன் வீட்டிலேயே தனிமையில் இருக்க வேண்டும்.

இந்நோய் பற்றிய தகவல் அறிய பொது சுகாதா துறை இயக்குநர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் தொலைபேசி எண் (044) 24321569–ஐ தொடர்பு கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் இந்நோய் மேலும் பரவாமல் இருக்க அரசுடன் இணைந்து தனியார் மருத்துவமனைகளும் பொது மக்களும் போதிய ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3/3

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9